முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.
முன்னிலை திருமதி.T.நித்யகலா,B.Com.,BL.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திட்டக்குடி.

2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 28 ஆம் நாள் புதன்கிழமை.
OS.31/2022

பிச்சைப்பிள்ளை ....... வாதி

/எதிர்/

1.ராமலிங்கம்
2.ரமேஷ்
3.வருவாய் வட்டாட்சியர், திட்டக்குடி
4.கூடுதல் ஆட்சியர், (வருவாய்), கடலூர்
5.கோட்டாட்சியர், விருத்தாசலம் ....... எதிர்வாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் 28.06.2023 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.M.பழனிமுத்து,MA.,BL., அவர்கள் ஆஜராகி வந்த நிலையில், 1 முதல் 5 எதிர்வாதிகள் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும் வாதி ஆஜராகாததால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்புரை

வழக்குச் சொத்தைப் பொருத்து வாதிக்கு சித்தித்துள்ள Prescriptive Easement மற்றும் Easement of Necessity பாத்தியம் கிடைக்கும்படிக்கும், வாதிக்கு சித்தித்துள்ள Prescriptive Easement மற்றும் Easement of Necessity பாத்தியத்திற்கு விரோதமாக எதிர்வாதி வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து விளைநிலமாக மாற்றாமல் இருக்கும்படிக்கும், வழக்குச் சொத்தான பாதை வழியாக வாதி எப்பொழுதும்போல் அமைதியான முறைமையில் சென்று புழங்கி அனுபவித்து வருவதை எதிர்வாதி எந்தவகையிலும் யாதொரு தடையோ, இடையூறோ

செய்யாது இருக்கும்படிக்கும், மேற்படியார்களை நிலைக்கால உறுத்துக்கட்டளை மூலம் தடை செய்யும்படிக்கும், தாவாவின் செலவுத் தொகை வாதிக்கு எதிர்வாதிகளால் கிடைக்கும் படிக்கும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் 16.1.2023 அன்று வாதி இறந்துவிட்ட நிலையில் போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் வாதியின் வழக்கறிஞர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 28 ஆம் நாளாகிய இன்று இந்த தீர்ப்புரை என்னால் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்/நித்யகலா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.